## மார்ச் - 11

**"ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்". - எபி 12 : 1**

யாவே தேவனின் அழைப்பிற்குரிய வெகுமதியைக் கண்டு கொண்டிருப்பவர்களும், இலக்கை நோக்கித் தொடருகிறவர்களுமாகிய நீங்கள், "உங்கள் மனதின் அரையைக் கட்டிக் கொண்டு" உங்கள் நோக்கங்களையும் முயற்சிகளையும் பலப்படுத்தி, உங்கள் தீர்மானத்தைப் புதுப்பித்துக் கொண்டு, உங்கள் ஊக்கத்தை இரட்டிப்பாக்கி அனாவசியமான உலகக் கவலைகளின் பாரங்களை புறம்பே தள்ளி விட்டு, உங்கள் ஆர்வத்தை விருத்தி செய்து, அப்போஸ்தலன் ஏவுகிறது போல, உங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடுங்கள். "வெறும் ஆகாயத்தை சிலம்படிக்கிறவனைப் போல ஓடாமல், ஒரு நோக்கத்தை முன் வைத்து, துணிச்சலான ஆர்வத்துடன் தனது அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் நிறைவேற்ற உறுதி கொண்டிருக்கிற ஒருவனைப் போல ஓடுங்கள்". **-Z ’03, 54 (R 3149).**

ஒரு அடையாளம் தனது முன்னடையாளத்தைத் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது போல, மூப்பராகிய பாத்திரவான்களின் (விசுவாசிகளின்) மேன்மையான மாதிரி நம்மை சூழ்ந்து கொண்டு, விசுவாசமுள்ளவர்களுக்குத் தேவனுடைய உண்மையை சாட்சியிடுகிறது. அவர்களுடைய உயர்ந்த முன்மாதிரி, பந்தயப் பொருளுக்காக ஓடும் ஓட்டத்தில் இடைஞ்சற்படுத்துகிறதும் நம்மை நெருங்கி நிற்கிறதுமான பாவங்களையும் எறிந்துவிட நம்மை எச்சரிக்கை செய்கிறது. இவ்விதமாக இவைகளை கழற்றி எறிந்துவிட்டதினால், முழுமனதுடன் கிறிஸ்துவின் சாயலை அடையவும், அதைப் பத்திரப்படுத்திக் கொள்ளவும் ஓடுகிற ஓட்டத்தில் விடா முயற்சியுடன் ஓடலாம். **-P ’26, 28.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

எபி 11:2-40; யாக் 5:10,11; சங் 19:12,13; 2கொரி 7:1; கொலோ 3:8; 1பேது 2:1; பிலி 3:13,14; 1கொரி 9:24,26; எபி 6:1; லூக் 21:19; எபி 10:36; யாக் 1:4;5:7.

**கோபுர வாசிப்பு : Z ’13, 291 (R 5318).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் எனது பாரங்களையும் சூழ்ந்து நிற்கும் பாவத்தையும் பந்தயப் பொருளுக்காக ஓடும் ஓட்டத்தைப் பற்றியும் நான் என்ன செய்தேன்? எனது நோக்கங்கள், உதவிகள் அல்லது இடையூறுகள் பலன் என்ன?